# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## ஐரோப்பிய ஆத்துமாக்கள் மேல் கிருபையின் இனிய மழை பொழிந்தது!

### ரஷ்யா, லாட்வியாவில் நடைபெற்ற போதகர்கள் கருத்தரங்கு மற்றும் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டங்கள்






















2003ஆம் ஆண்டில், ரஷ்ய கிறிஸ்தவ சரித்திரத்திலேயே திரளான மக்களை கவர்ந்த கூட்டமாக தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ரஷிய ஒருங்கிணைப்பின் படைமுயற்சி கூட்டம் அமைந்தது. அது வறண்ட நிலத்தை ஆவியானவரின் அக்கினிமயமான கிரியைகளால் உருகச் செய்தது. அது முதற்கொண்டு ரஷ்ய மான்மின் சபைகளின் கூட்டமைப்பின் தலைவர் போதகர் விளாடிமிர் ஒய்ஸ்போவ் மூலமாக தொடர்ச்சியாக ஊழியங்களை சபையானது செய்துகொண்டு வருகிறது (படம் 4, நடுவில்). 2016 ஆம் ஆண்டு உள்ளூர் போதகர்களின் வேண்டுகோளுக்கிணங்க ரஷ்யாவிலுள்ள செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உயர்திரு. சூஜின் லீ அவர்கள் போதகர்கள் கருத்தரங்கையும், சுகமளிக்கும் கூட்டத்தையும் நடத்தினார். தேவனுடைய வல்லமையினால் அவர்கள் மெய்யான விசுவாசத்தைப் பெறும்படி உதவிச் செய்தார்.

2016ம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் 23 வரை உயர்திரு. சூஜின் லீ (படம் 1) ரஷ்ய மற்றும் லாட்வியாவில் போதகர்கள் கருத்தரங்கையும் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தையும் நடத்தி–னார். அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டை (அப். 19:11–12) மூலமாக மிகவும் பலத்த வல்லமையான கிரியைகள் நிகழ்த்தப்பட்டன. உள்ளூர் போதகர்களும், விசுவாசிகளும் வறண்ட நிலம் இனிய மழையால் நனைவதைப் போன்று கிருபையாலும் உணர்வி–னாலும் நிரப்பப்பட்டனர்.

#### TBN ரஷ்ய அலைவரிசையில் செய்தி

செப்டம்பர் 17 அன்று, முதலாவது கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டம் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள கொலிஜி திரையரங்கில் 500 க்கும் மேற்பட்ட மக்கள் பங்குப்பெற நடைபெற்றது (படம் 3). “வல்லமை” என்ற தலைப்பிலான காணொளி காண்பிக்கப்பட்டது. அதன் பின்னர் மான்மின் தலைமை சபையின் கலைக்குழுவினர் தங்களது கலைநிகழ்ச்சிகளை காண்பித்தனர். உயர்திரு. சூஜின் லீ அவர்கள் 1 யோவான் 1:5–7ன் அடிப்படையில், “ஒளியில் நடக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்” என்ற தலைப்பில் செய்தியை வழங்கிய பிறகு வல்லமையின் கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்கள்.

35 ஆண்டுகளாக தன்னுடைய இடது காதில் செவிடாக இருந்த ஒரு மனிதன் அந்தக் காது வழியாக கேட்கும் திறனைப் பெற்றுகொண்டான். மற்ற அநேகர் நல்ல கண்பார்வைத் திறன், சரீரத்தின் ஒரு பக்க பக்கவாதத்திலிருந்து மற்றும் கடுமையான மூட்டு வீக்கத்திலிருந்தும் சுகத்தைப் பெற்றுக்கொண்டனர். ஊன்றுகோல்கள் மற்றும் சக்கர நாற்காலியை சார்ந்துகொண்டு நடந்த சிலர் அவைகளின்றி நடக்கத் துவங்கினர். ஒரு பெண் மருத்துவர் தனக்கு 35 வருடமாக இருந்த சக்கரை நோயிலிருந்து குணமானாள் (படங்கள் 7–10). TBN ரஷ்ய அலைவரிசையின் செய்திக் குழுவினர் பிரசங்கியாளரை நேர்க்காணல் எடுத்து, கூட்டத்தைப் பற்றிய செய்திகளை ஒளிபரப்பினார்கள்.

செப்டம்பர் 18 அன்று, 2003 ரஷ்ய படைமுயற்சி கூட்ட ஒருங்கிணைப்பு குழுவின் துணைத் தலைவராக இருந்த போதகர் ஆண்ட்ரி வொல்சாக்கவ் அவர்களின் சபையில் உயர்திரு. லீ அவர்கள், “பத்துக் கன்னிகைளின் உவமை” என்ற செய்தியை பிரசங்கித்தார். அதற்கு அடுத்த நாளில் அவர் “பரிசுத்தம்” என்ற கருப்பொருளின்கீழ் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் மான்மின் சபையில் (போதகர் விளாடிமிர் ஒய்ஸ்போவ்) போதகர்கள் கருத்தரங்கை நடத்தினார். ரஷ்ய போதகர்களுடன் பெலாரஸ், உக்ரைன், எஸ்டோனியா, பிரான்சு மற்றும் இஸ்ரேலிலிருந்து வந்த போதகர்களும் கலந்துகொண்டனர் (படம் 4).

உயர்திரு. சூஜின் லீ போதகர்கள் பாவங்களை களைந்துபோட்டு, அக்கினியான ஜெபத்தின்மூலம் பரிசுத்தமாக மாறும்படியாக பரிந்துரையோடு வலியுறுத்தினார்; அப்பொழுதுதானே அவர்களால் வல்லமையான போதகர்களாக மாற முடியும் என்றும் சொன்னார். போதகர்கள் பரிசுத்தத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக, பரிசுத்த மாகவேண்டும் என்ற புதுப்பிக்கப்பட்ட தீர்மானத்தை எடுத்துக்கொண்டனர்.

ரஷ்ய மான்மின் சபைகளின் கூட்டமைப்பினர் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் வாயிலாக செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் போன்று மற்ற பகுதிகளிலும் பரிசுத்த சுவிசேஷத்தை பரவச் செய்ய வேண்டும் என்பதை அறிந்துக் கொண்டனர். அந்த அமைப்பின் அங்கத்தினர்கள் ரஷ்யா முழுவதையும் விழித்தெழச் செய்ய ஒருங்கிணைய வேண்டுமென்று மறுபடியும் தங்களது மனதில் தீர்மானித்தனர்.

#### இன்விக்டரி இணையபக்கத்தில் லாட்வியாவில் நடந்த கூட்டம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது

செப்டம்பர் 21 அன்று, ரீகாவிலுள்ள லாட்வியன் சபைகளிலேயே மிகப் பெரிய மற்றும் லாட்வியா உட்பட மற்ற இடங்களையும் சேர்த்து மொத்தம் 300 கிளை சபைகளைக் கொண்ட நியூ ஜெனரேஷன் சபையில் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டமானது ரஷ்ய மொழி பேசும் மக்களுக்கான மிகவும் பிரசித்திப்பெற்ற இன்விக்டரி என்ற இணையபக்கத்தில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. கலைக்குழுவைச் சார்ந்த பாடகி சகோதரி ஜங்யுன் கிம் ரஷ்ய பாடல்களை பாடினாள், வல்லமை ஆராதனைக் குழுவினர் கலைநிகழ்ச்சிகளை காண்பித்தனர் (படம் 2 மற்றும் 5). பிறகு, உயர்திரு. லீ அவர்கள், “மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணினால் மட்டுமே நித்திய வாழ்வுண்டு” என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். ஏறக்குறை 500 பேர் பங்குபெற்றனர்.

அவர்களில் அநேகர் முதுகு தட்டு விலகல், மூட்டுவீக்கம், மங்கலான பார்வைத்திறன், கேட்கும் திறன் குறைவு, புற்றுநோய், மனஅழுத்தம், கார் விபத்தின் பின்விளைவுகள் மற்றும் ஒரு பக்கம் செயலற்றுப் போன பக்கவாதம் உட்பட பல்வேறு வியாதிகளிலிருந்து சுகத்தைப் பெற்றுக் கொண்டனர்.

செப்டம்பர் 23 அன்று, லாட்வியா, வால்மியராவிலுள்ள ரெவலேஷன் சபையில் கடைசி கூட்டம் நடைபெற்றது (படம் 6). உயர்திரு. சூஜின் லீ அவர்கள் “ஒளியில் நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்” என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்தார். அதன் பிறகு அவர் வியாதியஸ்தர் களுக்காக ஜெபித்தார். மூட்டு வீக்கம் மற்றும் கீழ்முதுகு தட்டு விலகல் உட்பட அநேக நோய்களிலிருந்து மக்கள் சுகமடைந்தார்கள்.



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

# தங்களது விசுவாச அறிக்கையின் மத்தியிலும் இரட்சிப்பு இல்லாத ஜனங்கள்

“...என்னை நோக்கி, “கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.” (மத்தேயு 7:21)

“...மரணத்திற்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்.” (1 யோவான் 5:16)

ஜனங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் மெய்யான இரட்சிப்பைப் பெற்று பரலோகம் செல்வதற்கு இறுதியான இலக்கை நிர்ணயிக்கின்றனர். அவர்கள், “கர்த்தாவே! கர்த்தாவே!” என்று சொல்லியும் அவர்களால் பரலோகத்திற்குள் நுழைய முடியாவிட்டால், அது எத்தனை பரிதாபகரமான காரியம்! தங்களது விசுவாச அறிக்கையின் மத்தியிலும் இரட்சிப்பைப் பெற முடியாமலும் பரலோகத்திற்குள் நுழைய முடியாமலும் போகும் மக்களின் சில நிலைகளை நாம் பார்ப்போம்.

## நிலை : 1 பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பேசி, இடையூறு செய்து, விரோதமாக தூஷித்தல்

பரிசுத்த ஆவிக்கு “விரோதமாக பேசி,” “இடையூறு செய்து” மற்றும் “விரோதமாக தூஷித்தல்” என்பது தேவனுடைய கிரியைகளுக்கு எதிராகப் பேசி கிரியை செய்தவைகளைக் குறிக்கின்றது (மத்தேயு 12 : 31–32; மாற்கு 3 : 20–30; லூக்கா 12:10). தேவனை அறியாத அவிசுவாசிகளால் திருச்சபை உபத்திரவப்படுவது போல் அல்லாமல் இப்பேர்பட்ட வார்த்தைகளும் செயல்களும் தேவனில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்து சத்தியத்தை அறிந்த மக்களிடமிருந்து வருகிறதாகும். அவர்கள் தங்கள் பொல்லாப்புகளைப் பின்பற்றி அறிந்தே தேவனுடைய கிரியைகளை துணிகரமாய் எதிர்க்கிறபடியால் அப்படிப்பட்ட நபர்களுக்கு இரட்சிப்பு இல்லை.

வியாதிகள் மற்றும் பெலவீனங்கள் சுகமாகுதலையும் தேவனுடைய வல்லமையால் பிசாசுகள் துரத்தப்படுவதையும் கண்ட பின்னர், ஒரு நபர் இன்னமும் இப்பேர்பட்ட வெளியரங்கமான கிரியைகளை “சாத்தானுடைய கிரியைகள்” என்று ஆணித்தரமாய் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசி, இடையூறு செய்து, விரோதமாக தூஷித்தால் அவர் எப்படி தேவனுடைய பிள்ளை என்று கருதப்படுவார்? மனிதனுடைய ஆற்றலால் பிரதிபலிக்க முடியாத தேவனுடைய கிரியைகளை கண்டு, நல்ல இருதயமுள்ள தேவனுடைய விசுவாசி நன்றிகளை ஏறெடுத்து தேவனை மகிமைப்படுத்துவதேயன்றி வேறேதும் செய்ய முடியாது.

மாறாக, பொல்லாப்பு செய்கிறவர்கள் பரிசுத்த ஆவியின் கிரியைகளை மறுதலிக்கவும் தேவனை எதிர்ப்பதற்கு தீவிரமாகவும் இருப்பார்கள். அசுத்த ஆவிகள் மக்களை அவர்கள் வியாதிகள் அல்லது பெலவீனங்களிலிருந்து சுகமாக்குகிற வல்லமையை கொண்டிருப்பதில்லை. அசுத்த ஆவிகளைத் துரத்துவதினாலும் வியாதியஸ்தர்களை சுகமாக்குகிறதினாலும் தேவனை மக்கள் மகிமைப் படுத்துவதற்கு எந்த ஒரு வழியும் அவைகள் அனுமதிப்பதில்லை. தூஷிக்கிறதை குறித்து கொடுக்கப்படுகிற வழிநடத்துதல் அவருடைய வல்லமையை வெளிப்படுத்துகிற தேவனுடைய ஊழியர்களின் ஊழியத்திற்கு குறுக்கீடாக இருப்பதற்கும் கூட பொருந்தும். இப்பேர்பட்ட குறுக்கிடுதல் நேரடியாகவே தேவனை எதிர்ப்பதற்கு சமானமாகும். காரணம் அவர்கள் தேவனுடைய மனிதனையும் அவர் மூலமாக வெளிப்படுகிற பரிசுத்த ஆவியின் கிரியைகளையும் மறுதலிக்கவே சேவை செய்கிறார்கள்.

யாத்திராகமத்தின் காலக்கட்டத்திலே இஸ்ரவேலர்களுக்குப் புசிக்க ஏதும் இல்லாதிருந்தபோது, அவர்கள் மோசே மற்றும் ஆரோன் மீது பழிசாட்டி அவர்களுக்கு விரோதமாக முறுமுறுத்தனர். மோசே அவர்களை நோக்கி, “கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றான்” (யாத்திராகமம் 16:8). அப்போஸ்தலர் நடபடிகள் 5 ஆம் அதிகாரம் முதல் ஐந்து வசனங்களில் அனனியா மற்றும் அவனுடைய மனைவி சப்பிராள் பற்றிய சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் ஆஸ்திகளை விற்று அதின் ஆதாயத்தை தேவனுக்கு கொடுக்க வேண்டும் என பொருத்தனைச் செய்திருந்தனர். அவர்கள் தங்கள் பேராசையில், எப்படியோ சிலதை தங்களுக்கென வைத்துக்கொண்டு ஆதாயத்தில் ஒரு பகுதியை மட்டுமே பேதுருவிடம் கொண்டு வந்தனர். அவர்கள் விற்ற அனைத்தையும் கொண்டு வந்து கொடுப்பதுபோல நடித்தனர். அந்த தம்பதியினர் பேதுருவை அல்ல பரிசுத்த ஆவியை வஞ்சித்து தேவனிடம்தாமே பொய் சொல்லியபடியால், அவர்கள் மனந்திரும்புவதற்குகூட வாய்ப்பளிக்கப்படாமல் மரணத்தைச் சந்தித்தனர் (அப். 5:1–11).

## நிலை 2: மறுபடியும் அவரை சிலுவையில் அறைந்து தேவனுடைய குமாரனை அவமானப் படுத்துகிறது

எபிரெயர் 6:4–6ல் வாசிக்கிறோம், “ஏனெனில் ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.” இந்த வசனங்கள், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய கிருபையை அனுபவித்தும், பரலோகம் மற்றும் நரகம் இருக்கிறதை கற்றறிருந்தும், சத்திய வசனத்தை கேட்டு அதை விசுவாசித்தும், ஆயினும் சோதிக்கப்பட்டு, தேவனை கைவிட்டு, உலகத்திற்கு திரும்பி, தேவனுடைய மகிமை வெளிப்படுவதிலிருந்து தடுக்கிற வண்ணமாக வெளியரங்கமாய் கிரியை செய்கிற மக்களைக் குறிக்கிறது.

இருப்பினும், பரிசுத்த ஆவியின் கிரியைகள் மத்தியில் தேவனுடைய கிருபையை அனுபவித்த பின்பும்கூட உலகத்திற்கு திரும்புகிறவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருள் மிக அதிகமாக அதிகமாக சாத்தான் இன்னும் அதிக பயங்கரமாக விரோதமாக கிரியை செய்வான். அவர்கள் அவிசுவாசிகளைக் காட்டிலும் அதிபயங்கர பொல்லாப்புகளைச் செய்வார்கள். அவர்கள் ஒரு காலத்தில் பெற்ற கிருபையை மறுதலிப்பார்கள். திருச்சபையின் மீதும் விசுவாசிகள் மீதும் உபத்திரவத்தை முழுவீச்சாக நடத்துவார்கள். நம்முடைய ஆண்டவரை வெளியரங்கமாக அவமானப்படுத்துகிறவர்களால் மனந்திரும்புதலின் ஆவியை பெற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் அவர்கள் இறுதியாக மரணத்தைச் சந்திப்பார்கள்.

யூதாஸ்காரியோத்தைக் குறித்து நினைத்துப் பாருங்கள். ஒரு காலக்கட்டத்தில் இயேசுவின் சீஷர்களில் ஒருவனாய் இருந்தவன். இயேசுவின் ஊழியத்திற்கு முதற்கண் சாட்சியாய் இருந்தவன். ஆனால், அவன் தன் சுய ஆதாயத்தை தேடி, இறுதியாக இயேசுவை 30 வெள்ளி காசுக்காக காட்டிக் கொடுத்து துரோகம் செய்துவிட்டான். அதற்கேற்றாற்போல, அவன் அதை சரிப்படுத்திக் கொள்ளவோ அவன் வருத்தத்தை மேற்கொள்ளவோ முடியாமல், யூதாஸ் தான் செய்த காரியத்திற்கு மனந்திரும்ப வாய்ப்பே இல்லாது தற்கொலை செய்துக்கொண்டான்.

## நிலை 3: சத்தியத்தை அறிகிற அறிவைப் பெற்ற பின்னரும் துணிகரமாக பாவஞ் செய்கிறது

எபிரெயர் 10:26–27 நமக்குச் சொல்கிறது, “சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.” இந்தப் பகுதி குறிப்பாக சத்தியத்தை அறிந்தும், அதை விசுவாசித்தும் நம்மை தேவன் எச்சரித்த அந்தப் பாவங்களை தொடர்ந்து செய்கிறவர்களை சுட்டிக் காண்பிக்கிறது.

2 பேதுரு 2:21–22, “அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.” துணிகரமாக பாவஞ்செய்கிறவர்கள் தாங்கள் பாவம் செய்கிறோம் என்று நன்கு அறிவார்கள். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களை அறிக்கைச் செய்வார்கள், ஆனால் அவர்கள் தங்கள் பழைய பாவ வாழ்க்கைக்கே திரும்பி விடுவார்கள்.

தாவீது ராஜா சற்று நேரம் சோதிக்கப்பட்டு பயங்கரமான கொலை பாதக செயலை செய்த நேரம் இருந்தது. இருப்பினும் தீர்க்கதரிசி அதைச் சுட்டிக்காட்டிய போது, அந்த ராஜா தீவிரமாய் பாவ அறிக்கைச் செய்து தனது வழிகளிலிருந்து மனந்திரும்பினான். அவனது பாவத்தின்நிமித்தம் தேவனுடைய சோதனைகளுக்குட்பட்டபோது, தாவீது அவைகளைத் தாழ்மையோடு ஏற்றுக் கொண்டான். அது கைமாறாக அவன் இருதயத்திலிருந்து பாவசுபாவங்களை அகற்றி தேவனுடைய கண்களில் சற்குணனாக மாற்றியது.

ஆனால் சவுல் ராஜாவின் சம்பவம் முற்றிலும் வித்தியா சமானது. தீர்க்கதரிசியாகிய சாமுவேல் வந்து அவனது தவறுகளை அவனுக்கு நினைப்பூட்டியபோது அந்த ராஜா சாக்குப் போக்குகளை மாத்திரமே சொன்னான், அவன் மனந்திரும்பவில்லை.

இது இன்றும்கூட உண்மையாயிருக்கிறது. தனது விசுவாசத்தை அறிக்கைச் செய்து சத்தியத்தை அறிந்திருக்கிற நபர் பாவஞ்செய்தால், அவன் தனது இருதயத்தை மனந்திரும்புதலில் ஊற்றி, ஒளியில் நடந்து நற்கனிகளை விளைவிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தாமே அவனுக்காக வாக்குக்கடங்கான பெருமூச்சோடு பரிந்துபேசி அவனது தவறுகளை அவனுக்கு நினைப்பூட்டுகிறபடியால் அவன் இவ்விதம் செய்ய வேண்டும். இருப்பினும், அவன் துணிகரமாய் பாவஞ்செய்யும்போது, தேவன் அவனை விட்டு தம்முடைய முகத்தை திருப்பிவிடுவார். இப்பேர்பட்ட நிகழ்வில் அந்நபர் மனந்திரும்புதலின் ஆவியை பெற முடியாது. பரிசுத்த ஆவியை அவித்து போடுவதில் முடிவடைவான் (1 தெசலோனிக்கேயர் 5:19).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களுடைய நாமங்கள் நீங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தாலும், நீங்கள் தேவனுக்கு முன்பாக பாவங்களை அறிக்கைச் செய்து பாவச் சுவரை அழிக்காவிட்டால், அந்த நாமங்கள் கிறுக்கப்பட்டுப் போகும் (வெளி 3:5).

மேலும், நாம் செய்த தவறான செயல் “மரணத்திற்கு வழிநடத்தும் பாவமாய்” இல்லாவிட்டாலும் அவைகளை களைந்துபோட்டு அவைகளை அறிக்கைச் செய்யாமல் நம்மால் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட முடியாது. சாத்தானால் சோதிக்கப்பட்டு, “மரணத்திற்கு நேராக வழிநடத்துகிற “பாவங்களை” செய்ய பலவந்தப்படுத்தப்படுவோம். மேலும் அந்த இரட்சிப்பு சிறந்ததாக வெட்கக்கரமான இரட்சிப்பாய் இருக்கும். ஆகவே, நீங்கள் அனைவரும் பாவத்திற்கு விரோதமாக இரத்தஞ்சிந்தப்படத் தக்கதாக போராடி எல்லா வகையான தீமையின் ரூபங்களையும் களைந்துப்போட வேண்டும் என்று ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன் (எபிரெயர் 12:4; 1 தெசலோனிக்கேயர் 5:22).

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]



# ஜெபத்தின் வல்லமையை அனுபவிப்பது எப்படி

**ஒரு வல்லமையான ஜெபம் சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தி எல்லையற்ற ஆசீர்வாதங்களை கீழே கொண்டு வரும்! யாரானாலும் வல்லமை நிறைந்த ஜெபத்தின்மூலமாக ஆசீர்வாதங்களையும் பதில்களையும் பெற முடியும். ஜெபத்தின் வல்லமையை அனுபவிப்பதற்கு இரண்டு முக்கிய திறவுகோல்கள் இங்கே உள்ளன.**

## பகுதி 1: ஜெபத்தின் வல்லமை எத்தனை ஆச்சரியமானது என்பதை நீங்கள் உணர்ந்து, தேவனுடைய பதில்களை கீழே கொண்டுவரும் அக்கினியான ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும்

எஸ்தரின் புத்தகத்தில், சதி திட்டத்தின் விளைவாக அழிக்கப்படும் அபாயத்தில் யூதர்கள் வைக்கப்படுகிறார்கள். பெர்சியாவின் ராஜாத்தியான எஸ்தர் தனது குல மக்களான யூதர்களை காப்பாற்றும்படிக்கு மூன்று நாள் உபவாசித்து, “நான் செத்தாலும், சாகிறேன்” என்று கூறி ஒரு தீர்மானத்தோடு ராஜாவைப் பார்க்கச் சென்றாள்.

ராஜாத்தியானாலும் அவள் ராஜாவினால் அழைக்கப்பட்டால் தான் ராஜாவினிடத்திற்குச் செல்ல முடியும். அவன் அழைக்காமல் ராஜாவிற்கு முன்பாக அவள் சென்றாள், அவள் கொலை செய்யப்படலாம். இருப்பினும், எஸ்தர் ராஜாவின் இருதயத்தை அசைக்கும்படிக்கு தேவனை விசுவாசித்து தன் குல மக்களுக்காக அன்போடு ஜெபத்தை ஏறெடுத்தாள். அவளது விசுவாசமும் அன்பும் தேவனுடைய இருதயத்தை அசைக்க போதுமான தாயிருந்தது.

இதன் விளைவாக, யூதர்கள் அழிவிலிருந்து அற்புதமாக தப்பினார்கள். அவளது நிலையில் பார்த்ததுபோல, தேவன் ஏற்றுக்கொள்கிற வகையான ஜெபம் மானுட வரலாற்றை மாற்றுவதற்கும், ஒரு தேசத்தை காப்பாற்ற அல்லது அழிக்கக்கூடிய மாபெரும் வல்லமையை கொண்டிருக்கிறது.

> எலியா வானத்திலிருந்து அக்கினியை இறக்கியபோது ஜெபித்ததுபோல, தேவனுடைய ராஜ்ஜியத்தை அடைவதற்கு தேவனில் உறுதியான விசுவாசத்தோடும் ஊக்கமான இருதயத்தோடும் நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

நீங்கள் ஜெபித்தும் சந்தேகித்து, கீழ்ப்படியாமல், சமாதானத்தை உடைத்து, நியாயந்தீர்த்து குற்றஞ்சாட்டுவீர்களேயானால், உங்களது ஜெபம் தேவனுக்கு முன்பாக அழகான தூபமாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. நீங்கள் இருமனமுள்ளவர்களாக அல்ல காற்றினால் அடிப்பட்டு அலைகிறவர்களாகவும் அல்ல, உறுதியான விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் பதிலைப் பெற முடியும் (யாக்கோபு 1:6–8). இதன் காரணம் நீதிமானுடைய வேண்டுதல் மிகவும் பலன் உள்ளதாய் இருக்கிறது. ஆவிக்குரிய விசுவாசமுள்ள ஒரு நபர், தன் சுய ஆதாயத்தைத் தேடாமல் தியாகம் செய்யக்கூடியவராக இருந்தால் அதிகமானதை அடைய முடியும் (யாக்கோபு 5:16).

மோசே எந்த ஒரு சூழ்நிலையிலும் தேவனை சார்ந்துகொண்டு எல்லாவற்றையும் விசுவாசத்தோடு பார்த்தான். பூமியின் முகப்பிலே மற்றெந்த மனிதர்களைக் காட்டிலும் அவன் மிகவும் தாழ்மையுள்ளவனாக இருந்தான். அவன் இஸ்ரவேல் மக்களுக்காக தன் உயிரைப் பணயம் வைக்கும் அளவிற்கு நேசித்தான். தேவன் அவனது விசுவாசத்தையும் அன்பையும் அறிவார். ஆகவே அவர் அவனுக்கு வல்லமையையும் அவனது ஜெபத்திற்கான பதில்களையும் அவனுக்குக் கொடுத்தார்.

ஆதலால், உங்கள் ஜெபத்திற்கான பதிலை நீங்கள் பெறுவதற்கு, நீங்கள் குறிப்பில்லாமல் அல்லது நோக்கமில்லாமல், ஆகாயத்தில் ஜெபிக்கக்கூடாது. நீங்கள் பெலத்தின் ஜெபத்தை ஏறெக்க வேண்டும். தேவனுடைய வல்லமையை கீழே இறக்கும் இந்த அக்கினியான ஜெபம் “கர்த்தர் என் ஜெயக்கொடியானவர்” என்று எழுதப்பட்டிருப்பதுபோல ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயத்திற்கு வழிநடத்தும்.

## பகுதி 2: பரிசுத்த ஆவியின் சத்தத்தைக் கேட்டு ஜெபத்தின் மூலமாக அவருடைய வழிநடத்துதலைப் பெற்றால் மட்டுமே உங்களால் தேவனுடைய சித்தத்தைச் சீக்கிரமாகவும், பரிபூரணமாகவும் அடைய முடியும்.

தாவீது ராஜா எல்லாக் காரியத்திலும் எல்லாவற்றையும் குறித்து தேவனிடத்தில் கேட்டான். இது அவன் தேவனை பரிபூரணமாக விசுவாசித்து அவரைச் சார்ந்துக் கொண்டான் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. ஏதாகிலும் நடந்தபோது அவன் முதலாவது ஜெபித்து அந்தக் காரியம் எவ்வளவு சிறிதாக இருந்தாலும் காணப்பட்டாலும் தேவனுடைய சித்தம் என்ன என்பதைக் கண்டறிய முயற்சித்தான். அவனுக்கு கஷ்டங்களை அது ஏற்படுத்தியிருந்த போதிலும், அவன் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்தான். அவன் ராஜாவாக எந்த ஒரு மனித வழியையும் பயன்படுத்தவில்லை. எல்லாம் தேவனுடைய அநாதி திட்டத்திலும் சித்தத்திலும் சரியாகச் செல்லும் என்று விசுவாசித்தான். அவ்வாறு அவனால் தேவனிடத்தில் எல்லாவற்றையும் ஒப்புவிக்க முடிந்தது.

பல நிலைகளில் தேவனுடைய சித்தம் என்பது மனிதர்களுடைய எண்ணங்களிலிருந்து வித்தியாசமானதாக இருக்கும். தாவீது ராஜா தன் தேசத்தில் சமாதானத்தோடு தன் அரண்மனையில் சௌகரிகமாக தங்கியிருந்தபோது, அவன் தேவனுடைய ஆலயத்தை கட்ட மிகவும் ஆவல் கொண்டான். இருப்பினும், தேவன் அவன் மிகப்பெரிய யுத்தங்களைச் செய்து அதிகமான இரத்தம் சிந்தியப்படியினால் அவன் அவருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டமாட்டான் என்றும் அவனுடைய குமாரனே அதைக் கட்டுவான் என்றும் கூறினார் (1 நாளாகமம் 22).

தாவீது ராஜா மனித நற்குணத்தைப் பின்பற்றி ஆலயத்தைக் கட்ட முயற்சித்திருந்தால், அது நன்றாக சென்றிருக்காது. அவன் தேவனால் பாராட்டுதலையும் பெற்றிருக்க மாட்டான். இருப்பினும், அவன் முதலாவது ஜெபித்தான், அதனால்தான் அதைக் கட்டுவது தேவச்சித்தம் அல்ல என்பதை அறிந்துணர்ந்தான். அதைக் கட்டுவதற்குப் பதிலாக அவன் மரணத்திற்கு முன்னதாக கட்டுமானப் பணிக்காக போதி அளவில் மிகவும் சவதரித்து வைத்தான். தேவன் தாவீதின் இருதயத்தை ஏற்றுக்கொண்டு, அவனுக்கு நித்திய ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணி பெரிதாய் அவனை ஆசீர்வதித்தார் (2 சாமுவேல் 7).

> இன்றும்கூட, தேவனுடைய அநாதி திட்டத்தையும் சித்தத்தையும் பரிபூரணமாக அடையப் பெறுவதற்கு பரிசுத்த ஆவியின் சத்தத்தைக் கேட்ட ஜெபத்தின் மூலமாக அவரது வழிநடத்துதலைப் பெறுவது மிக முக்கியமானதாக இருக்கிறது. தேவன் ஜெப சத்தத்தை தானே கேட்கிறவர் அல்ல, ஆனால் அவர் அந்த நபரின் உள்ளத்தை ஆராய்ந்து அவருடைய இருதயத்தை ஏற்றுக்கொள்கிறவர்.

ஆக, நீங்கள் அர்த்தமற்றவைகளாக திரும்பத் திரும்ப பழக்கதோஷமாக அநுதினமும் ஒரே காரியத்தையே ஜெபிக்காமல், ஜெபிப்பதற்கு வலுகட்டாயப்படுத்துகிறது போலவும் உணராமல் அல்லது சுய உணர்வோடு ஜெபிக்கக்கூடாது. நீங்கள் தேவனுக்காக அன்போடும் தேவனுடைய ராஜ்ஜியத்தை விரிவுப்படுத்துவதற்கு வாஞ்சையோடும் ஜெபிக்க வேண்டும். அப்போது நீங்கள் தேவ சித்தத்தை அறிந்துணர்ந்து தேவனுக்கு ஏற்கும் ஜெபத்தை ஏறெடுக்க முடியும்.

இத்தகைய ஜெபம் வானத்தில் கதவுகளைத் திறந்து ஆசீர்வாதங்களையும் பதில்களையும் கீழே கொண்டு வரும். அது தேவனுடைய சிங்காசனத்தையும் அசைக்கும். அது மிகவும் வல்லமையுள்ளது. சாத்தான் அதற்குப் பயப்படுவான். அப்பேர்பட்ட ஜெபத்தின்மூலமாக, மனிதர்களால் வெளிப்படுத்த முடியாத எண்ணற்ற கிரியைகள் நடைபெறக்கூடும். வேறு வார்த்தையில், சிருஷ்டிகராகிய தேவனுடைய இருதயத்தை அசைக்கிற வல்லமை ஜெபத்தில் இருக்கிறது.

இருவர் ஒரே நேர அளவாக ஜெபித்திருந்தாலும்கூட, ஜெபதூபம் அவர்களது விசுவாசம் மற்றும் அவர்கள் எந்தளவாய் பரிசுத்தமாகியிருக்கிறார்கள் என்பதன்படி வித்தியாசமாக இருக்கும். அது அவர்கள் எத்தனை ஊக்கமாக ஜெபிக்கிறார்கள் என்பதையும் சார்ந்திருக்கும். நீங்கள் கஷ்டமானதும் பெரிதானதுமான ஏதோ ஒன்றை நீங்கள் கேட்கும் போது, நீங்கள் அதிக ஜெபத்தை நிரப்ப வேண்டும். அதனால் ஜெபத்திற்குப் பதிலைபெற நீண்ட நேரம் எடுக்கிறது.

ஒருவர் தேவனை நேசித்து, விசுவாசம் கொண்டிருந்து, கிரியைகள் மற்றும் உண்மை உட்பட எல்லாவற்றிலும் தேவனுடைய இருதயத்தை பின்பற்றினால் அவரது ஆத்துமா சீக்கிரம் செழிக்கும். மேலும் அவர் தேவையான அளவு ஜெபத்தை சீக்கிரமாக நிரப்ப முடியும்.

ஆதலால், நாம் அநுதினமும் தேவனிடத்திற்கு வல்லமையான ஜெபத்தை ஏறெடுத்து, சீக்கிரமாக பதில்களைப் பெற்று நாம் செய்கிற எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்துவோம் (சங்கீதம் 2:8; 9:14–15).

# “ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக என்னை அர்ப்பணித்திருப்பதால் நான் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறேன்”

போதகர் தெபோரா ஜீயங் லீ, வயது 45, வெளிநாட்டவர் மாகாண போதகர், மான்மின் தலைமை சபை



நான் சிறுமியாக இருந்தபொழுது கூச்ச சுபாவமுடையவளாகவும், அநேக யோசனைகளால் நிரம்பியவளாகவும் இருந்தேன். நான் ஒரு மனிதன் எதற்காக வாழ வேண்டும் என்று நினைத்ததுண்டு. என்னுடைய கல்லூரி நாட்களில், நான் தத்துவம் மற்றும் மதம் சார்ந்த புத்தகங்களைப் படித்தேன். நான் பொதுநலக்கோட்பாடு மற்றும் மனிதநேயக் கோட்பாடு போன்ற கொள்கைகளை விரும்பினேன். எப்படியிருந்தாலும் என் கேள்விகளுக்கு அவை ஒன்றும் பதிலை தரவில்லை.

ஒரு நாள், என் கல்லூரி சிநேகிதி ஒரு சபைக்கு என்னை வழிநடத்தினாள். என் கேள்விகளுக்குப் பதிலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற முனைப்போடு சபையில் பங்குப்பெற நான் துவங்கினேன். சபை முகாம் கூட்டங்களில் நான் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டேன்; ஆண்டவருக்காக வாஞ்சையோடு வாழ வேண்டும் என்ற நம்பிக்கையை பெற்றுக் கொண்டேன்.

கல்லூரி பட்டமளிப்பிற்கு பின்பு ஒரு ஊழிய கல்வி வளாகத்தின் நிர்வாகியாக பணியமர்த்தப்பட்டேன். வகுப்பறையில் அதிகாலை முதல் முழங்கால் படியிட்டு ஆத்துமாக்கள் அநேகரை அனுப்பும்படிக்கு ஜெபித்தேன். ஆனாலும் எழுப்புதல் உண்டாகவில்லை, இருந்த ஜனங்களும் மாறவில்லை. நான் ஊக்கமாக வேலைச் செய்வதைப் போன்று வெளிப்புறத்தில் காணப்பட்டபோதிலும், என்னுடைய இருதயத்தில் இருந்த நியாயந்தீர்த்தல், குற்றப்படுத்துதல், பொறாமை மற்றும் எரிச்சலினால் சண்டை உருவானது. இதனால் நான் மகிழ்ச்சியை இழந்தேன். பிறருக்கு வசனத்தை போதிப்பதை குறித்து குற்றமனச்சாட்சியோடு இருந்தேன்.

நான் உபவாசம் மற்றும் ஜெபத்தை ஏறெடுத்து தேவனிடத்தில் கெஞ்சினேன். நான் விரக்தியிலும் ஆவிக்குரிய தாகத்திலும் இருந்ததால் மிகுந்த கண்ணீரை சிந்தினேன். இதற்கிடையில், 1997ஆம் ஆண்டு நான் தற்செயலாக மான்மின் தலைமை சபையின் வாராந்திர அறிக்கைத்தாளை வாசிக்க நேர்ந்தது. அதில் நீண்ட ஆண்டுகளாக எனக்குள் இருந்த அநேக கேள்விகளுக்கான தெளிவான பதில்கள் இருந்தது. நான், “ஆவிக்குரிய மண்டலத்தில் பாவமில்லாமையே வல்லமைக்கான ஆதாரம்” என்ற வாக்கியத்தை வாசித்தபொழுது என் முழு சரீரத்திலும் சிலிர்ப்படைந்தேன், அதைக் குறித்து உற்சாகமடைந்தேன்.

“ஆஹா! நான் தேடிகொண்டிருந்த சத்தியம் இதுதானே!” நான் அவசர அவசரமாக மான்மின் தலைமை சபைக்குச் சென்று தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் அனைத்து தலைப்பிலான பிரசங்க ஒலிநாடாக்களையும் வாங்கினேன். நான், “சிலுவையின் செய்தி,” “ஆவி ஆத்துமா சரீரம்,” “யோபு விரிவுரைகள்,” மற்றும் “ஆதியாகம விரிவுரைகள்” போன்ற பிரசங்கங்களை கேட்டேன். அவைகள் எனக்கு தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனைப் போன்ற சுவையாக இருந்தன. நான் என் ஜெபத்திற்கான பதில்தான் இவையெல்லாம் என்று நிச்சயித்துக் கொண்டேன். ஜீவனுள்ள வார்த்தைகளை கண்டுகொண்டேன் என்ற மகிழ்ச்சியோடு சபையில் அங்கத்தினராய் பதிவுசெய்தேன். நான் உண்மையாக பணிபுரிந்ததால் அநேக கடமைகள் எனக்குக் கொடுக்கப்பட்டன. ஊழியம் செய்ய வேண்டுமென்ற தரிசனத்தோடு நான் ஒருங்கிணைந்த பரிசுத்த இறையியல் கல்லூரியில் இணைந்து கொண்டேன்; 2002ல் நான் ஒரு போதகராக மாறினேன்.

டிசம்பர் 25ம் தேதி, 2010க்குப் பிறகு விரைவான ஆவிக்குரிய ஓட்டத்தில், என் கடந்த காலத்தை நான் திரும்பிப் பார்த்தேன். நான் உண்மையாக வேலைச் செய்தாலும் என் இருதயத்தை விருத்தசேதனம் செய்வதில் சோம்பேறியாக இருந்துவிட்டேன் என்று எண்ணினேன். என்னுடைய சுய வழியிலேயே நான் ஊக்கமாக இருந்துவிட்டேன் என்பதையும் அறிந்துகொண்டேன். என்னுடைய பாவசுபாவங்களை அகற்றுவதற்காக நான் பரிசுத்த ஆவியானவரை சார்ந்துகொள்ள துவங்கினேன். அதுமுதற்கொண்டு, எனக்குள் இருந்து பாவசுபாவங்கள் அகன்றுப்போக ஆரம்பித்தன; என் இதயத்தின் ஆழத்தில் மகிழ்ச்சியும் சமாதானமும் வந்தது.

டிசம்பர் 2015ல், நான் ஆவியின் இருதயத்தை அடையும்படியான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் அயல்நாட்டு மாகாண போதகராக கொரியாவில் தங்கி வசித்து வரும் அயல்நாட்டு விசுவாசிகளை பராமரித்து கொண்டு வருகிறேன். மொழி மற்றும் கலாச்சார வேறுபாடுகளையும் தாண்டி விசுவாசிகளை ஆறுதல்படுத்தும் மேய்ப்பருடைய அன்பை உணருவது மிகுந்த ஆச்சரியமாக உள்ளது (படம்).



ஒருமுறை ஒரு விசுவாசியின் கனவில் தலைமை போதகர் தோன்றினார். அந்த கனவில் அவர் அவளுடைய சொந்த ஊருக்குச் சென்று, அவளுடைய குடும்பத்தினரை பராமரித்து, அவர்களுக்காக ஜெபித்தார். அநேக விசுவாசிகள் தலைமை போதகருடைய ஜெபத்தின் மூலமாக தங்களது பிரச்சனைகளுக்கான தீர்வைப் பெற்றுள்ளனர். அது அவர்களுடைய விசுவாசத்தையும் உயர்த்தி இருக்கிறது.

அவர்களுடைய வாழ்க்கையில் கூடாத காரியங்கள் கூடியது, கூடும்படியான காரியங்கள் இன்னும் சிறப்பாக நடந்தது. அவர்கள் மற்ற ஜனங்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கின்றனர். நாட்கள் கடக்க நாங்கள் மிகுந்த சந்தோஷத்தை உணருகிறோம். அல்லேலூயா!

# “நான் தாயாகப் போகிறேன்”



கண்காணியை டன்ஷிவிங், வயது 37, பெனாங் மான்மின் காதுகேளாதோருக்கான சபை, மலேசியா

நானும் என் கணவரும் செவிடர்கள். நாங்கள் திருமணம் செய்துகொண்ட பிறகு, 11 ஆண்டுகளாக ஒரு குழந்தையை பெறமுடியாமல் இருந்தோம். நாங்கள் அனைத்து முறைமைகளையும் முயற்சித்தும் ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை. நாட்கள் நகர நான் மிகுந்த வேதனையை உணர்ந்தேன். நான் கர்ப்பமான பெண்களையும், அருமையான குழந்தைகளையும் பார்க்கும் போதெல்லாம் அதிக வேதனையை உணர்ந்தேன்.

செப்டம்பர் 2010ல், என்னுடைய கணவருடைய நண்பர் மூலமாக அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தை நான் பெற்றுக்கொண்டால் மலட்டுத்தன்மையிலிருந்து என்னால் குணமடைய முடியும் என்று கேள்விப்பட்டேன்.

அதைக் குறித்து கேட்டதே எனக்கு மிகுந்த சந்தோஷமளித்தது, ஆகவே ஒரு மான்மின் கிளைச்சபைக்கு நான் சென்றேன். அது மற்றச் சபைகளிலிருந்து வேறுபட்டிருந்தது. அது பிரகாசமானதாக இருந்தது. விசுவாசிகள் GCN தொலைக்காட்சி வாயிலாக மான்மின் தலைமை சபையின் ஆராதனையில் இணைந்துகொண்டனர், அது எனக்கு புதியதாக இருந்தது. கூடுதலாக, அந்தச் சபையில் சைகை மொழிபெயர்ப்பை வழங்கியது மிகவும் நன்றாக இருந்தது. தினசரி நடைபெறும் தானியேல் ஜெபக்கூட்டம் முழுவதும் ஜீவ ஆற்றல் நிறைந்ததாக இருந்தது; துதிபாடல்கள் மிகவும் அழகாக இருந்தன.

அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களை நான் கேட்டபொழுது தேவன் தம்முடைய பிரியமான பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்புகிறார் என்பதை உணர்ந்துகொண்டேன். எனினும் அவருடைய பதிலைப் பெறுவதற்கேற்ற பாத்திரத்தை நான் ஆயத்தம் செய்யாமல் இருந்தேன். என் கணவரோடு நான் இசைவுடன் இல்லாமல் இருந்ததற்காகவும் என் விசுவாச குறைவுக்காகவும் மனந்திரும்பினேன். அதன் பிறகு நான் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன்.

மார்ச் 2016ல், என் முழு இருதயத்தோடு நான் 42 நாட்கள் சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற்றேன். நான் அநுதினமும் காலையில் ஒரு வேளை உபவாசத்தையும் பொருத்தனை ஜெபத்தையும் ஏறெடுத்தேன். தேவன் மேய்ப்பரின் அன்பை உணரும்படியாக என்னை ஆசீர்வதித்தார். செவிடான என்னைப் போன்ற மக்களை புதிய எருசலேமிற்கு வழிநடத்தும்படிக்கு அவர் ஜெபித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் உணர்ந்தபொழுது மிகுதியாக கண்ணீர் சிந்தினேன்.

இதற்கிடையில், எனக்கு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. 11 ஆண்டுகளில் முதல் முறையாக நான் கர்ப்பம் தரித்தேன்! இது எனக்கு பத்தாவது மாதமாகும். இந்த நவம்பர் மாத துவக்கத்தில் நான் தாயாகப் போகிறேன். இந்தச் சபைக்கு என்னை நடத்தின தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன். எனக்காக ஜெபித்த தலைமை போதகருக்கும் நான் நன்றிகளை செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com